(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.5

Name : **திரு.பாலமுருகன்**

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது செம்பூரணி கரை ரோடு, செம்பூரணி கரையில் குடியிருந்து வருகிறேன். நான் கண்ணாடி வேலை செய்து வருகிறேன். இன்றிலிருந்து சுமார் 7 வருடத்திற்கு முன்பு அதிகாலை 03.00 மணியளவில் அ.சா.1 சின்னபேச்சி என்பவர் அலறல் சத்தம்போட்டுக்கொண்டு வந்து தனது மகனை கொன்றுவிட்டதாக சொன்னார். நான் ஓடி சென்று பார்த்தபோது சின்னபேச்சி வீட்டின் முன் வாசல் அருகே போடப்பட்டிருந்து கட்டிலில் இரத்த வெள்ளத்தில் வினோத் கிடந்தார். அதன்பிறகு காவல்துறைக்கு தகவல் சொல்லி ஆம்புலன்சில் ஏற்றிவிட்டோம். நாங்கள் காலை 07.00 மணிக்கு மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு வினோத்தை பார்ப்பதற்காக சென்றோம். அதன்பிறகு காலை 11.00 மணியளவில் வினோத் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை.</u>**

Sd/- பாலமுருகன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.23 05:02:09 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.